**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.</u>**

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | : 89/2017 | பி.வா.சா. | : 1 |
| பெயர் | : சின்னச்சாமி @ கிருஷ்ணன் | த/பெ. | : நல்லியப்பன் |
| தாலுகா | : நத்தம் | கிராமம் | : காசம்பட்டி |
| தேதி | : 02.06.2025 | வயது | : 37/2025 |

1969–ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு .44–ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம்:

**<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**:

2) எனக்கு எழுதப்படிக்க தெரியும். எனக்கு இந்த வழக்கு பற்றிய முழு விபரம் தெரியும். வாதிகள் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விபரம் எனக்கு தெரியும். எந்த சர்வே எண்ணிற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சர்வே எண்.130/2, அதன் தற்போதைய சர்வே எண்.130/2G ஆகும். பழைய சர்வே எண்.130/2ன் மொத்த விஸ்தீரணம் 1 ஏக்கர், 55 செண்ட் இருக்கும் என்றால் சரிதான். மேற்படி மொத்த விஸ்தீரணம் 1 ஏக்கர், 55 செண்ட்டில் 3ல் ஒரு பாகம் 52 செண்ட்டை பொறுத்து வாதிகள் அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான்.

3) தற்போதைய சர்வே எண்.130/2Gல் தான் வழக்கு சொத்து உள்ளது என்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள ஆவணமானது சர்வே எண்.130/2G என்பது வழக்குச் சொத்திற்கு பொருந்தாது என்றால் சரியல்ல. சர்வே எண்.130/2ல் கிணறு மற்றும் தோட்டத்து வீடு உள்ளது என்றால் சரிதான். வாதிகளின் தந்தை பூசாரி அம்பலம் என்பவரும், எங்களுடைய தந்தை நல்லியப்பன் அம்பலமும் உடன்பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான்.

4) என் தந்தை மற்றும் வாதிகளின் தந்தை தவிர மற்ற சகோதரர்கள் உள்ளார்கள் என்றால் சரிதான். அதேபோல் எங்களுடைய தாயார் 1ம் பிரதிவாதி பொதியழகியும், வாதிகளின் தாயார் 4ம் பிரதிவாதி மாயம்மாளும் உடன்பிறந்த சகோதரிகள் என்றால் சரிதான். இந்த வழக்கை நான், எனது அம்மா மற்றும் எனது அண்ணன் ஆகியோர் நடத்தி வருகிறோம் என்றால் சரிதான். அவர்களும் இந்த வழக்கில் சாட்சி சொல்ல தயாராக உள்ளோர்களா என்றால் இல்லை. குடும்ப உறவைக் கருதி எனது அண்ணனும், அம்மாவும் வழக்கை நடத்த முன்வரவில்லை, நான் மட்டும் தான் பிரச்சினை செய்வதற்காக இந்த வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல, அவர்களும் என்னுடன் இந்த வழக்கை நடத்துகிறார்கள். அவர்கள் வழக்கை முன்நடத்த விரும்பவில்லை என்றாலும், வழக்கிற்காக அவ்வாறு சொல்கிறேன் என்றால் சரியல்ல.

5) நான், எனது எதிர்வழக்குரை மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எனக்கு ஆங்கிலத்தில் எழுதப்படிக்க தெரியுமா என்றால், ஆங்கிலம் தெரியாது. எனது எதிர்வழக்குரை மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் பல இடங்களில் ஆங்கிலத்தில் உள்ள வார்த்தைகள் தெரியுமா என்றால் வழக்கறிஞர் என்னிடம் விபரங்கள் சொன்னார். பி.வா.சா.ஆ.2 ல் கண்ட பெத்தாயி என்பவருக்கு, எனது தாயார் பொதியழகி மற்றும் வாதிகளின் தாயார் 4ம் பிரதிவாதி மாயம்மாள் மட்டும் தான் வாரிசு என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 ஆனது 07.05.1973ம் தேதி ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

6) வா.சா.ஆ.1 ஆவணமானது 28.04.1973ம் தேதி கிரையம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 ஆவணத்திற்கு முன்பே வாதிகளின் தந்தை பூசாரி அம்பலம் தாவாசர்வே எண்.130/2ச் சொத்தை கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். மேற்படி பூசாரி அம்பலம்

பி.வா.சா.ஆ.2 ஆவணத்திற்கு முன்பே கிரையம் வாங்கியுள்ளதால் பி.வா.சா.ஆ.2 ஆவணம் சட்டப்படி செல்லத்தக்க ஆவணமல்ல என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் 1 ஏக்கர், 56 செண்ட்டில் கீழ்புறம் செண்ட் 78 கிரையம் வாங்கியுள்ளதாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனால் வா.சா.ஆ.1 ஆவணத்திற்கும், பி.வா.சா.ஆ.2 ஆவணத்திற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

7) வாதிகளின் தந்தை பூசாரி அம்பலம் அவருடைய மனைவி 4ம் பிரதிவாதி மாயம்மாளை திருமணம் செய்தபோது, ஒரு ஆதரவிற்காக தாவாச் சொத்தான 52 செண்ட்டில், 26 செண்ட்டை அவருடைய மனைவி மாயம்மாளுக்கு கிரையம் செய்து கொடுத்தார் என்றால் சரிதான். அது தொடர்பான ஆவணம் தான் வா.சா.ஆ.2 ஆவணமாக தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். இந்த விபரங்கள் அனைத்தும் எனது பாட்டிக்கு தெரியும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 மற்றும் 2ல் உள்ள விபரங்கள் அனைத்தும் எனது பாட்டி பெத்தாயிக்கு நன்கு தெரியும் என்றாலும், வழக்கிற்காக மறைத்து சொல்கிறேன் என்றால் சரியல்ல.

8) வா.சா.ஆ.2 மூலமாக வாதிகளின் தந்தை பூசாரி அம்பலம், அவரது மனைவிக்கு 26 செண்ட்டை எழுதி வைத்திருந்தாலும், திருமணத்திற்கு பிறகு முழு சொத்தையும் பூசாரி அம்பலம் அனுபவித்து வந்தார் என்றால் இல்லை. வாதிகள் அனைவரும் பூசாரி அம்பலம் – மாயம்மாளின் பிள்ளைகள் என்றால் சரிதான். வாதிகளின் தந்தை பூசாரி அம்பலம் 1990ல் மனைவி மற்றும் மக்களை விட்டுவிட்டு இறந்துவிட்டார் என்றால் சரிதான், நான் சிறுவயதாக இருந்தேன், அவர் இறந்த வருடம் தெரியாது. பி.வா.சா.ஆ.1 ஆவணமான பெத்தாயிக்கு, வெள்ளையம்மாள் எழுதிக்கொடுத்த கிரைய ஆவணத்தில் சர்வே எண்.130/2Gல் 38 ஏக்கர், 94 செண்ட்டில் மேல்புறம் 50 செண்ட்டை பொறுத்து

மட்டும் தான் எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் சர்வே எண்.130/2ல் 1 ஏக்கர், 56 செண்ட் என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அதனால், பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்ட சொத்து வேறு, வழக்குச் சொத்து வேறு என்றால் சரியல்ல.

9) பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் வெள்ளையம்மாள் என்பவர் 2002ம் ஆண்டு பெத்தாயி என்பவரிடம் கிரையம் வாங்கியதாகத்தான் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் பொது பாத்தியம் மண் கிணர்–1, 3–HP பம்ப் செட் வகையறாவில் பொதுப்பாத்தியம் உள்பட என்று தான் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் கண்ட பொதுப்பாத்தியம் என்பது வழக்குச் சொத்தான 52 செண்ட்டிற்குரிய 3ல் ஒரு பகுதி கிணறு மற்றும் பம்ப் செட்டிற்கு கட்டுப்பட்டது என்றால் இல்லை. இந்த பொதுப்பாத்தியம் என்பது கிணறு மற்றும் பம்ப் செட்டிற்கும் உள்ளது என்றால் சரியல்ல.

10) எங்களுடைய தாத்தா மற்றும் வாதிகளின் தாத்தாவின் பெயர் ராமசாமி என்றால் சரிதான். ராமசாமியின் தந்தை பெயர் நல்லியப்பன் என்றால் சரிதான். மேற்படி நல்லியப்பனின் சகோதரர் பெயர் பழனி என்றால் சரிதான். பழனியிடமிருந்து தான் பெத்தாயி பி.வா.சா.ஆ.2 ஆவணம் மூலம் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். நல்லியப்பனின் சகோதரர் பழனி என்பவர் தான் பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் கண்ட நபர் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 மற்றும் 2 ஆவணங்களில் நான்குமாலில் மேல்பக்கம் நல்லியப்பன் வகையறா என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி நல்லியப்பன் வகையறா தான் எனது தாத்தா ராமசாமியின் தந்தை நல்லியப்பன் என்றால் சரிதான்.

11) பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் பழனி என்பவருக்கு மேலூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் ஓ.எஸ்.எண்.48/1966ல் பாகமாக கிடைத்த

சொத்தில் 1 ஏக்கர், 58 செண்ட்டில், கீழ்புறம் 78 செண்ட் என்று தான் உள்ளது என்றால் சரிதான். ஓ.எஸ்.எண்.48/1966 வழக்கானது நல்லியப்பன் மற்றும் பழனிக்கும் நடந்த வழக்கு என்றால் சரிதான். ஓ.எஸ்.எண்.48/1966 வழக்கில் கண்ட கீழ்புறம் 78 செண்ட் பழனிக்கு போக, மீதமுள்ள 78 செண்ட் என்பது எனது தாத்தா ராமசாமியின் தந்தை நல்லியப்பனுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

12) பி.வா.சா.ஆ.3 ஆவணமானது, எனது பாட்டி பெத்தாயி அம்மாள் மேலூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் ஓ.எஸ்.எண்.60/1976 என வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். ஓ.எஸ்.எண்.60/1976 வழக்கில் கண்ட பிரதிவாதிகள் அனைவரும் எனது தந்தை, வாதிகளின் தந்தை மற்றும் அவர்களின் சகோதரர்கள், தாத்தா ராமசாமி ஆகியோர்கள் என்றால் சரிதான். மேற்படி வழக்கானது 78 செண்ட்டிற்கு பொது கிணற்றிலிருந்து தண்ணீர் பாய்ச்சக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ளார் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3 மற்றும் 4 ஆவணங்கள் இந்த வழக்குச் சொத்திற்கு சம்பந்தமற்ற ஆவணங்கள் என்றால் சரியல்ல.

13) இவ்வழக்குச் சொத்தான 52 செண்ட்டிற்கு தடையுத்தரவு எதுவும் வாங்கப்படவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.5 ஆவணமும் 78 செண்ட்டிற்கு ஆனது தான் என்றால் சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ.5 ஆவணம் இந்த வழக்குச் சொத்திற்கு சம்பந்தமற்ற ஆவணம் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.5 ஆவணத்தில் எனது தந்தை மைனர் என்பதால் அவரை சிவில் கைது செய்யவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.6 வில்லங்கச்சான்று சர்வே எண்.130/2Gல் செண்ட் 96ல் மேல்புறம் செண்ட் 16 என்று மட்டும் தான் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.6 ஆவணம் வழக்குச் சொத்திற்கு சம்பந்தமற்ற ஆவணம் என்றால் சரியல்ல.

14) பி.வா.சா.ஆ.7 ஆவணம் 15.09.1993 ல் எங்கள் பெயரில் ஏற்பட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் சர்வே எண்.130/2G ல் செண்ட் 96 ல் மேல்புறம் 14 செண்ட்டிற்கும், சர்வே எண்.130/2D ல் செண்ட் 12 என்றும், சர்வே எண்.130/2F ல் செண்ட் 2 என்றும், மொத்தம் 28 செண்ட் என்று உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.7 ஆவணத்தில் எனது தந்தையின் சகோதரர்கள் ராமன் மற்றும் லெட்சுமணன் ஆகியோர்கள் சேர்ந்து கிரையம் பெற்றதாகதான் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ.7 ஆவணத்தில் 3 ல் ஒரு பங்கு என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.7 ஆவணமும், இந்த வழக்கிற்கு சம்பந்தமில்லாத ஆவணம் என்றால் சரியல்ல.

15) பி.வா.சா.ஆ.7 ல் நான்குமாலில் மேல்புறம் எனது சகோதரர்கள் என்று உள்ளது என்றால் சரிதான். அந்த சகோதரர்கள் என்பது வாதிகளின் தந்தை பூசாரி அம்பலத்தை குறிக்கும் என்றாலும், அது தான் தாவாச் சொத்து என்றாலும் சரியல்ல.

**வாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை தொடர்ச்சி வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் 02.06.2025. கையெழுத்து செய்துள்ளார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2025.06.02 18:38:08 +0530

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்.